



சென்னை மயிலாப்பூர் பிருந்தாவன் தெருவில், சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலாப்பூர் மேற்கு பகுதி, 121வது வட்டக் கழகத்தின் சார்பில், மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட 1000 குடும்பங்களுக்கு நிவாரண உதவிப் பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி கலந்து கொண்டு 1000 குடும்பங்களுக்கு தலா 10 கிலோ அரிசி, பருப்பு, எண்ணெய் உள்ளிட்ட மளிகை பொருட்கள், சமையலுக்குத் தேவையான பாத்திரங்கள் அடங்கிய நிவாரண உதவிப் பொருட்களை வழங்கினார்! உடன், மாவட்ட கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான மயிலை வேலு, நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.





பல்லாவரம் வடக்கு மற்றும் தெற்கு பகுதி திமுக சார்பாக வட்ட (பூத் )பாக இளைஞரணி நிர்வாகிகள் பாக முகவர்கள்BLA2 ஆலோசனைக் கூட்டம் பல்லாவரத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் மண்டல தலைவர் வடக்கு பகுதி கழக செயலாளர் இ. ஜோசப் அண்ணாதுரை தலைமையில் தெற்கு பகுதி கழக செயலாளர் இ. எஸ். பெர்னாட் வரவேற்பு உரையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ அன்பரசன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். அப்பொழுது மாவட்ட துணைச் செயலாளரும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினருமான இ. கருணாநிதி தாம்பரம் மாநகராட்சி மேயர் க. வசந்தகுமாரி துணை மேயர் கோ. காமராஜ், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி. கே. ஏ . சத்திய பிரபு, துணை அமைப்பாளர் ஜெ. இன்சமாம் ஆகியோர் உடன் இருந்தனர்.

### குடியிருப்புகளில் சூழ்ந்த வெள்ள நீரும் வடியத் தொடங்கியது!

# தென் மாவட்டங்களில் மக்கள் இயல்பு நிலைக்குத் திரும்பினர்!

## அமைச்சர்கள் - கனிமொழி கருணாநிதி எம்.பி. நிவாரண உதவி வழங்கினர்!

திருநெல்வேலி, டிச. 20 -

நெல்லை மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக கொட்டித் தீர்த்த கனமழை காரணமாக அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து 30 ஆயிரம் கன அடிக்கு மேல் உபரி நீர் திறந்துவிடப்பட்டது. காட்டாற்று வெள்ளத்தின் காரணமாக தாமிரபரணி ஆற்றில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால், தாழ்வானப் பகுதிகளில் குடியிருப்புகளுக்குள் தண்ணீர் புகுந்து மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதுடன், பல்வேறு இடங்களில் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டது.

இந்த நிலையில் குமரி கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வுநிலை ஆழ்கடல் நோக்கி நகரத் தொடங்கியதால், நெல்லையில் நேற்று பிற்பகல் முதல் மழை படிப்படியாக குறைய தொடங்கியது. இதுபோன்று மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளிலும் மழை குறைந்ததன் காரணமாக பாபநாசம், சேர்வலாறு ஆகிய அணைகளில் இருந்து வெளியேற்றப்படும் உபரிநீரின் அளவு கணிசமாக குறைக்கப்பட்டு சுமார் 7,000 முதல் 10 ஆயிரம் கனஅடி வரையே வெளியேற்றப்பட்டு வருகிறது. இதன் காரணமாக கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட தாமிரபரணி ஆற்றில், நேற்று முன்தினம் இரவு முதல் தண்ணீர் குறைய தொடங்கியது. நேற்று காலை சுமார் 10 அடி உயரத்திற்கு வெள்ளநீர் குறைந்து தாமிரபரணி ஆறு இயல்பு நிலைக்கு திரும்பி வருகிறது.

**தூத்துக்குடியில் கனிமொழி கருணாநிதி எம்.பி. நிவாரணம் வழங்கினார்!**

வரலாறு காணாத அளவில் கொட்டித் தீர்த்த கனமழையால், பாதிக்கப்பட்டுள்ள தூத்துக்குடியில், மக்களை மீட்கவும், அவர்களுக்கு அவசர உதவிகளை வழங்கும் பணியில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர்.

குறிப்பாக இத்தொகுதியின் எம்.பி. கனிமொழி கருணாநிதி பம்பரமாக சுழன்று நிவாரண பணிகளை மேற்கொண்டு வருகிறார். இந்த நிலையில் மீட்பு மற்றும் நிவாரண பணிகளை மேற்கொள்வது குறித்து ஆலோசனைக் கூட்டம், தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி, மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதாஜீவன், மாவட்ட ஆட்சியர் லட்சுமிபதி, மேயர் ஜெகன் பெரியசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் வெள்ள பாதிப்புகளை கனிமொழி கருணாநிதி எம்.பி. நேரில் ஆய்வு செய்தார்.

பொதுமக்களை சந்தித்து அவர்களுக்கு தேவையான நிவாரணப் பொருட்களை கனிமொழி கருணாநிதி எம்.பி. வழங்கி னார்.

### வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி -திருநெல்வேலி மாவட்டங்களுக்கு

# உணவு - நிவாரணப் பொருட்கள் வழங்க சிறப்புக் குழுக்கள்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, டிச. 20 -

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்க சிறப்பு குழுக்கள் அமைத்து தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பான அரசு செய்திக் குறிப்பு வருமாறு : -கடும் மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள தூத்துக்குடி மாவட்டத்திற்கும், திருநெல்வேலி மாவட்டத்திற்கும் உணவு மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்குவதற்காக சிறப்பு அலுவலர்களை நியமிக்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி தூத்துக்குடி மாவட்டத்திற்கு கி.செந்தில்ராஜ், ஒருங்கிணைப்பு அலுவலராக தூத்துக்கு டியில் நியமிக்க ப்பட்டுள்ளார். அவரது தொலைபேசி எண். 7397770020. பாதுகாப்பு மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்கும் மையமாக தூத்துக்குடியில் உள்ள உள் விளையாட்ட ரங்கம் செயல்படும். தூத்துக்குடியில் உள்ள இந்தக் கட்டுப்பாட்டு அறை பொறுப்பு அலுவலர்கள் பின்வருமாறு;

1.செல்வி. இரா. ஐஸ்வர்யா, கூடுதல் ஆட்சியர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தூத்துக்குடி, தொலைபேசி எண். 8973743830

2. ஒ.ராஜாராம், துணை ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி, தொலைபேசி எண். 9943744803

3.திருமதி. எஸ். அமுதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), தூத்துக்குடி, தொலைபேசி எண். 9445008155

இதே போல் திருநெல்வேலி மாவட்டத்தில் இப்பணிகளை ஒருங்கிணைக்க திருநெல்வேலி மாவட்ட நகராட்சி ஆணையர் நியமிக்கப்பட்டுள்ளார். அவரது பெயர் தாக்கரே சுபம் ஞானதேவ் ராவ், தொலைபேசி எண். 9442218000. அங்கு கூடுதலாக பின்வரும் அலுவலர்கள் இப்பணியினை ஒருங்கிணைப்பார்கள்.

1.சீ.கிஷன்குமார், உதவி ஆட்சியர் (பயிற்சி), திருநெல்வேலி, தொலைபேசி எண். 9123575120

2.ரேவதி, சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர், திருநெல்வேலி, தொலைபேசி எண். 9940440659

இப்பணிகளுக்கான மாநில ஒருங்கிணைப்பாளராக உள்துறை முதன்மைச் செயலாளர், திருமதி. பெ. அமுதா, செயல்படுவார்.

நிவாரணப் பொருள்கள் வழங்க விரும்புவோர் மற்றும் தன்னார்வலர்கள் மேற்காணும் அலுவலர்களைத் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.



பெருமழைனிால் அடையாறு ஆற்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட எஸ்.எம்.பிளாக், சுடுகாடு அருகிலுள்ள ஆற்றோர பகுதி தெருக்கள், தங்கவேல் நகர் பகுதியில் 2000 குடும்பங்களுக்கு (பகுதி செயலாளர், 138வது வார்டு கவுன்சிலர் கே.கண்ணன்) ஏற்பாடு செய்த அரிசி, பெட்சீட், ரஸ்க் பாக்கெட்களை அமைச்சர் மா.சுப்ரமணியன், ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ. முன்னிலையில் வழங்கினார். உடன் மாவட்ட அவைத் தலைவர் குணசேகரன், துணை செயலாளர் வாசுகி பாண்டியன், பகுதி துணை செயலாளர் அஜந்தாரவி, வட்ட செயலாளர்கள் மு.அன்பழகன், சோ.செந்தில்குமார், சதீஷ்கண்ணன், தொண்டரணி மாவட்ட அமைப்பாளர் தம்பி ஆர்.சசிகுமார், மகளீரணி மாவட்ட அமைப்பாளர் சகோதரி கனிமொழி தனசேகரன் மாவட்ட பிரதிநிதி பாரிநகர் சசி, பச்சையப்பன், சபரி, பூமி, சுதா, மேகநாதன், கார்த்திக், ஆனந்த், கமலக்கண்ணன், பாபு, ரமேஷ், ஏழுமலை, குமார் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



தாம்பரம் சட்டமன்ற தொகுதி – மதுரபாக்கம் ஊராட்சியில் – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ.19 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய நியாய விலை, கடையை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு சட்டமன்ற உறுப்பினர் – மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா திறந்து வைத்தார். உடன் தாம்பரம் மாநகராட்சி 3வது மண்டலக் குழுத்தலைவர் எஸ்.இந்திரன், மதுரபாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் மு.வேல்முருகன் ஒன்றிய கவுன்சிலர் அமுதா வேல்முருகன், மதுரப்பாக்கம் கிளை கழக செயலாளர் இரா.சந்தனம் உள்ளிட்டோர் உள்ளனர்.

### இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்வது குறித்து தொலைநோக்குத் திட்டங்கள் அவசியம்!

# அனைத்துப் பகுதிகளிலிருந்தும் உதவிக்கரங்கள் நீள வேண்டிய நேரமிது!

## “தீக்கதிர்” நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, டிச.20-

புயல் மற்றும் அதி கன மழை போன்ற இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்வது குறித்து தொலைநோக்குத் திட்டங்கள் அவசியம் எனவும், தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் உதவிக்கரங்கள் நீள வேண்டிய நேரமிது எனவும் குறிப்பிட்டு “தீக்கதிர்” நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

அது வருமாறு:-

மிக்ஜாம் புயல் மற்றும் அதிகனமழை காரண மாக தலைநகர் சென்னை உட்பட தமிழ்நாட்டின் வட மாவட்டங்கள் கடுமையான பாதிப்பைச் சந்தித்தன. இந்த மாவட்டங்களில் இயல்பு வாழ்க்கை மெல்ல மெல்ல திரும்பத் துவங்கி யுள்ள நிலையில், தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களான கன்னியாகுமரி, திருநெல் வேலி, தூத்துக்குடி, தென்காசி ஆகிய மாவட்டங்களில் அதிகனமழை பெய்து வருகிறது. விருது நகர், இராமநாதபுரம், சிவகங்கை, தேனி உள்ளிட்ட மாவட்டங்களிலும் கனமழை கொட்டி வருகிறது.

இடைவிடாத கனமழை காரணமாக குமரி, நெல்லை, தென்காசி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்க ளில் அனைத்து நீர்த்தேக்கங்களும் நிரம்பி வழி கின்றன. தாமிரபரணி உள்ளிட்ட ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு திருநெல்வேலி மாநகரம் உட்பட பல ஊர்களில் குடியிருப்புப் பகுதிகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது. மின்சாரம், தொலைத்தொடர்பு, ரயில் மற்றும் பேருந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. திருச்செந் தூர் உள்ளிட்ட ஊர்கள் வெள்ளத்தால் தனித்தீவு போல மாறியுள்ளன.

பல ஏரிகள், குளங்கள், கண்மாய்களின் கரை கள் உடைந்து சாலைகள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப் பட்டுள்ளன. ரயில் தண்டவாளங்கள் அரிக்கப்பட்டு ரயில் போக்குவரத்து முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் வளிமண்டல கீழடுக்குச் சுழற்சி நீடிப்பதால் இந்த நான்கு மாவட்டங்களிலும் கன மழை தொடர வாய்ப்பு உள்ளது என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது அச்சத் தையும், கவலையையும் அதிகரிப்பதாக உள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டினத்தில் ஓர் ஆண்டில் பெய்ய வேண்டிய மழை அளவு ஒரே நாளில் கொட்டித் தீர்த்துள்ளது. 1931ஆம் ஆண்டு க்குப் பிறகு பாளையங்கோட்டையில் அதிக மழை அளவு பதிவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

மாநில அரசும், மாவட்ட நிர்வாகங்களும் மீட்பு நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கியுள்ளன. ஒன்றிய அரசிடமிருந்து இயற்கை பேரிடர் மீட்புப் படையோடு முப்படைகளின் உத வியும் கோரப்பட்டுள்ளது. வரலாறு காணாத இந்த இயற்கைப் பேரிடரைச் சமாளிக்க மாநில அரசுக்கு ஒன்றிய அரசு அனைத்து வகை யிலும் துணை நிற்பது அவசியமாகும்.

வெள்ளத்தில் சிக்கியுள்ள மக்களை மீட்டு நிவாரண முகாம்களில் தங்க வைப்பது, அத்தி யாவசியப் பொருட்கள் தடையின்றி கிடைக்க வகை செய்வது போன்றவை முதன்மைப் பணி யாக உள்ளது. விவசாயம், கால்நடை மற்றும் சிறு, குறு தொழில்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை கணக்கிட்டு உரிய இழப்பீடு வழங்கப் பட வேண்டும். தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் உதவிக் கரங்கள் நீள வேண்டிய நேரமிது. இத்தகைய இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்வது குறித்து தொலைநோக்குத் திட்டங்கள் அவசியம்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிபிடப் பட்டுள்ளது.


தீக்கதிர்
2023 டிசம்பர் 19 செவ்வாய்க்கிழமை
உதவிக் கரங்கள் நீளட்டும்!
மிக்ஜாம் புயல் மற்றும் அதிகனமழை காரண மாக தலைநகர் சென்னை உட்பட தமிழ்நாட்டின் வட மாவட்டங்கள் கடுமையான பாதிப்பைச் சந்தித்தன. இந்த மாவட்டங்களில் இயல்பு வாழ்க்கை மெல்ல மெல்ல திரும்பத் துவங்கி யுள்ள நிலையில், தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களான கன்னியாகுமரி, திருநெல் வேலி, தூத்துக்குடி, தென்காசி ஆகிய மாவட்டங் களில் அதிகனமழை பெய்து வருகிறது. விருது நகர், இராமநாதபுரம், சிவகங்கை, தேனி உள்ளிட்ட மாவட்டங்களிலும் கனமழை கொட்டி வருகிறது.
இடைவிடாத கனமழை காரணமாக குமரி, நெல்லை, தென்காசி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்க ளில் அனைத்து நீர்த்தேக்கங்களும் நிரம்பி வழி கின்றன. தாமிரபரணி உள்ளிட்ட ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு திருநெல்வேலி மாநகரம் உட்பட பல ஊர்களில் குடியிருப்புப்



சமீபத்தில் பெய்த பெருமழை மற்றும் வெள்ள பாதிப்பினை தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திரு.வி.க.நகர் வடக்கு பகுதி, பெரம்பூர் ரோடு, கூட்டுறவு பண்டக சாலையில் உள்ள நியாய விலை கடையில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத் தொகை ரூ. 6000 தினை, சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார். இந்நிகழ்வில் மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம் கவி, பகுதிச் செயலாளர் எம்.சாமிகண்ணு, மாமன்ற உறுப்பினர் புனிதவதி எத்திராசன், பகுதி துணைச் செயலாளர் பெரம்பூர் ஆர்.ராஜன், எம்.தமீம், ஜெ.எம்.நிறைமொழி, அரசு அதிகாரிகள் மண்டல அலுவலர் முருகன், இ.இ.சரவணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், கனமழையினால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி, திருநெல்வேலி உள்ளிட்ட தென்மாவட்டங்களுக்கு அனுப்பப்படும் நிவாரணப் பொருட்கள் அடங்கிய வாகனங்களை மேயர் ஆர்.பிரியா நேற்று (19.12.2023) சென்னை ரிப்பன் கட்டட வளாகத்திலிருந்து கொடியசைத்து அனுப்பி வைத்தார். இந்நிகழ்வின்போது, கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆணையர் (வருவாய் (ம) நிதி)) திருமதி ஆர்.லலிதா, மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



மதுரவாயல் வடக்குப் பகுதி 92–வது வட்டத்தில் புயலின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் நிவாரணத் தொகையினை காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. பகுதி செயலாளர், நொளம்பூர் வே.ராஜன் ஆகியோர் வழங்கினர். வட்டச் செயலாளர் எம்.எம்ஜெயரத்தினம், எம்.ஏ. செந்தில்சுரேஷ், கே.குமரேசன், எம்.சி.எழிலரசு, ஏ.ஜி.வேலன், டாக்டர் எம்.சி.அழகிரி, ஏ.சுந்தரி, எம்.எஸ்.பிரபா, டி.கலைநேசன், எம்.பி.நவராஜ், எம்.என்.ராஜ்கமல், எம்.எஸ்.சந்தானம், எம்.பி.நவக்குமார், எம்.எஸ்.தமிழ்அழகன், எம்.பி.சீனிவாசன், எஸ்.ஜமுனா, எஸ்.ராகுல், டி.ஜெயச்சந்திரன், எம்.ஜி.சுரேஷ், எஸ்.பாலாஜி, எ.லீலவாதி, டி.புகழேந்தி, எம்.எஸ்.ஜெயசிம்மன், பி.நாகராஜ், கே.முருகன், கே.பிரகாஷ், எம்.எம்.கண்ணப்பன், ஜி.நாகராஜ், எம்.சி.விமல்தாஸ், வி.ஆர்.மகேந்திரன், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.